# சார்லோட்-மெக்லென்பர்க் பள்ளிகள்

படிவம் 725110.1

## பதிவு செய்வதற்கான நடைமுறைகள்

சேர்க்கை படிவங்களை மாணவர் ஒதுக்கீடு (ஸ்டூடெண்ட் பிளேஸ்மென்ட்) அல்லது CMS பள்ளியில் எதில் வேண்டுமானாலும் சமர்ப்பிக்கலாம் லாட்டரிக்கான சேர்க்கை காலக்கெடுவுக்குப் பிறகு, மாணவர்கள் நேரடியாக தங்கள் ஹோம் ஸ்கூல்களில் சேர்க்கை படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். (லாட்டரி தேதிகள் CMS இணையதளத்தின் மாணவர் ஒதுக்கீடு (ஸ்டூடெண்ட் பிளேஸ்மென்ட்) மற்றும் மேக்னட் திட்டத்திற்கான பிரிவுகளில் கிடைக்கும்.)

நார்த் கரோலினா சட்டத்திற்கு இணங்க, ஆகஸ்ட் 31 அல்லது அதற்கு முன்பு 5 வயதாகும் மாணவர்களை மழலையர் பள்ளியில் சேர்க்க வேண்டும் எந்த ப்ரீ-கே திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் மாணவருக்கும் ஆகஸ்ட் 31 அல்லது அதற்கு முன்பு 4 வயதாகியிருக்க வேண்டும்.

**பதிவு செய்வதற்கு பின்வரும் ஆவணங்கள் தேவை:**

- ❑ மாணவர் சேர்க்கை படிவம்
- ❑ பிறந்த தேதி மற்றும் சட்டப்பூர்வ பெயர் சான்று (பக்கம் 2ஐப் பார்க்கவும்)
- ❑ வசிப்பிடச் சான்று (பக்கம் 2 ஐப் பார்க்கவும்)
- ❑ பாதுகாப்பான பள்ளிகள் அறிவிப்பு
- ❑ தற்போதைய நோய்த்தடுப்பு பதிவு*
- ❑ முதல் முறையாக NC பொதுப் பள்ளிகளில் சேரும் அனைத்து குழந்தைகளும் சுகாதார மதிப்பீட்டிற்கான ஆதாரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.*

*இந்த ஆவணங்கள் மாணவர் நுழைவின் போது தேவைப்படும். தேவையான ஆவணங்கள் இல்லாத மாணவர்களுக்கு சமர்ப்பிப்பதற்கான "30 காலண்டர் நாள் சலுகை காலம்" வழங்கப்படுகிறது.

**மேலும் தகவலுக்கு பின்வரும் எண்களைத் தொடர்பு கொள்ளவும்:**

- பாதுகாவலர் தொடர்பான  கேள்விகள் 980-343-5335 இல் மாணவர் ஒதுக்கீட்டு (ஸ்டூடெண்ட் பிளேஸ்மென்ட்) குழுவுக்கு அனுப்பப்பட வேண்டும்
- சிறப்புத் தேவைகள் உள்ள மாணவர்களைப் பற்றிய கேள்விகள் ec@cms.k12.nc.us அல்லது 980-343-6960 இல் உள்ள மீத்திறக் குழந்தைகளுக்கான திட்டங்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

*மாணவர் ஒதுக்கீட்டு (ஸ்டூடெண்ட் பிளேஸ்மென்ட்)*
*1901 ஹெர்பர்ட் ஸ்பாக் லேன், சார்லோட் NC 28208 என்ற இடத்தில் அமைந்துள்ளது*

*மீத்திறக் குழந்தைகளுக்கான  திட்டங்கள் 4421 இல் அமைந்துள்ளது*
*ஸ்டுவர்ட் ஆண்ட்ரூ பவுல்வர்ட், சார்லோட், NC 28217*

# சார்லோட்-மெக்லென்பர்க் பள்ளிகள்

படிவம் 725110.1

## பதிவு செய்வதற்குத் தேவையான ஆவணங்கள்

சார்லோட்-மெக்லென்பர்க் பள்ளிகளில் (CMS) கலந்துகொள்ள எந்த மாணவரும் நியமிக்கப்படுவதற்கு முன், மாணவரின் பெற்றோர், சட்டப்பூர்வ பாதுகாவலர் அல்லது ஸ்பான்சர் *சட்டப்பூர்வ பாதுகாவலர் அல்லது ஸ்பான்சர்ஷிப்புக்கு நீதிமன்றம் அல்லது நிறுவனத்திடமிருந்து கூடுதல் ஆவணங்கள் தேவை)* பிறந்த தேதிக்கான ஆதாரம், சட்டப்பூர்வ பெயருக்கான சான்று, மெக்லென்பர்க் கவுண்டியில் சட்டப்பூர்வ வசிப்பிடத்திற்கான சான்று, தற்போதைய நோய்த்தடுப்பு மருந்துகள் மற்றும் NC பொதுப் பள்ளியில் புதிதாகப் படிக்கும் மாணவர்களுக்கு NC சுகாதார மதிப்பீடு ஆகியவற்றை வழங்க வேண்டும்.

## பிறந்த தேதி மற்றும் சட்டப்பூர்வ பெயர் சான்றுக்குப்

**பின்வரும் ஆவணங்களில் ஒன்று (1) காட்டப்பட வேண்டும்:**

- ❑ பிறப்புச் சான்றிதழின் அசல் அல்லது நகல்
- ❑ பாஸ்போர்ட்
- ❑ அரசு வழங்கிய அடையாள ஆவணம்
- ❑ அமெரிக்க வெளியுறவுத் துறை (I-94 வருகை/புறப்பாடு பதிவு)
- ❑ அகதிகள் மீள்குடியேற்றக் கடிதம் (உள்ளூர் நிதியுதவி நிறுவனம், அமெரிக்க சுகாதாரம் மற்றும் மனித சேவைகள் துறை, அகதிகள் மீள்குடியேற்ற அலுவலகம்) *கேள்விகள்? சர்வதேச மையத்தை 980-343-3784 என்ற எண்ணில் அழைக்கவும்*
- ❑ தத்தெடுப்பு ஆணை
- ❑ மாணவரின் ஓட்டுநர் உரிமம்
- ❑ ஆயுள் காப்பீட்டுக் கொள்கை
- ❑ சிகிச்சையளிக்கும் மருத்துவர் அல்லது குழந்தை பிறந்த மருத்துவமனையால் வழங்கப்பட்ட குழந்தையின் பிறப்பு பற்றிய எந்தவொரு மருத்துவ பதிவின் சான்றளிக்கப்பட்ட நகல்
- ❑ தேவாலயம், மசூதி, கோவில் அல்லது அதன் உறுப்பினர்களின் பிறப்பு பதிவுகளை பராமரிக்கும் பிற மத நிறுவனத்தால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழின் நகல்
- ❑ முன்பு சரிபார்க்கப்பட்ட பள்ளி பதிவுகள்

## வசிப்பிடச் சான்றுக்குப்

**பின்வரும் ஆவணங்களில் ஒன்று (1) காட்டப்பட வேண்டும்:**

- ❑ குடியிருப்பு பத்திரத்தின் நகல் **அல்லது** மிக சமீபத்திய குடியிருப்பு அடமான அறிக்கையின் பதிவு
- ❑ சான்றளிக்கப்பட்ட வசிப்பிட உறுதிமொழிப் பத்திரம் **மற்றும்**வீட்டு உரிமையாளர்/குத்தகைதாரரிடமிருந்து அடமான அறிக்கை, பத்திரம் அல்லது குத்தகையின் நகல்.
- ❑ குடியிருப்பு குத்தகையின் நகல்
- ❑ HUD நிறைவு அறிக்கை

### <u>மற்றும்</u>

**பின்வரும் நெடுவரிசைகளில் ஒன்றிலிருந்து ஒரு (1) ஆவணம்:**

- ❑ எரிவாயு, தண்ணீர், மின்சாரம், தொலைபேசி அல்லது கேபிள் உட்பட, கடந்த 30 நாட்களுக்குள் தேதியிடப்பட்ட ஏதேனும் **ஒன்று** க்கான பயன்பாட்டு ரசிது அல்லது பணி ஆணை
- ❑ செல்லுபடியாகும் வட கரோலினா ஓட்டுநர் உரிமம் அல்லது செல்லுபடியாகும் வட கரோலினா அடையாள அட்டை
- ❑ கடந்த 30 நாட்களுக்குள்ளான தேதியுடையது
  - ஊதியம் தொடர்பான ஆவணம்/பேரோல் ஸ்டப்
  - வங்கி அறிக்கை
  - கிரெடிட் கார்டுகான் அறிக்கை
- ❑ தற்போதைய வாகனப் பதிவு
- ❑ கடந்த ஆண்டிற்குள்ளான தேதியுடையது
  - வாகன வரி ரசிது
  - சொத்து வரி ரசிது
  - W-2
  - மருத்துவ உதவி அட்டை

### <u>அல்லது</u>

**பின்வரும் ஆவணங்களில் ஒன்று (1) காட்டப்பட வேண்டும்:**

- ❑ அங்கீகரிக்கப்பட்ட ஏஜென்சியின் கடிதம் (குழு வீடு)
- ❑ அகதிகள் மீள்குடியேற்றக் கடிதம்
- ❑ சார்லோட் ஹவுசிங் அத்தாரிட்டி குத்தகைக்கான நகல்

இந்த ஆவணங்கள் முகவரி சரிபார்ப்புக்கானவை. மேலும் இது பதிவு அல்லது முகவரி மாற்றத்திற்கான தற்போதைய முகவரியைக் கொண்டிருக்க வேண்டும். வசிப்பிடச் சான்றிதழைச் சரிபார்ப்பதில் சிரமம் உள்ள குடும்பங்களுக்கான மேல்முறையீட்டுச் செயல்முறையை CMS கொண்டுள்ளது, எனவே தேவையற்ற தாமதமின்றி மாணவர்களைச் சேர்க்க முடியும். மேலும் தகவலுக்கு, மாணவர் ஒதுக்கீடு குழுவைத் (ஸ்டுடெண்ட் பிளேஸ்மெண்ட்) தொடர்பு கொள்ள 980-343-5335 அல்லது 980-343-3784 என்ற சர்வதேச மைய எண்களை அழைக்கவும்.

மெக்கின்னி-வென்டோ சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ளபடி, வீடற்ற மாணவர்களுக்கு இந்த வசிப்பிடக் கொள்கை பொருந்தாது.

***மேலும் தகவலுக்கு www.cms.k12.nc.us ஐப் பார்வையிடவும் அல்லது 980-343-5335 ஐ அழைக்கவும்***

# சார்லோட்-மெக்லென்பர்க் பள்ளிகள்

படிவம் 725110.1

## மாணவர் சேர்க்கை படிவம்

7/2014

### மாணவர் தகவல் *பதிவு செய்யும் போது வயது, சட்டப்பூர்வ பெயர் மற்றும் வசிப்பிடத்திற்கான சரியான ஆதாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்*

| **மாணவரின் சட்டபூர்வப் பெயரின் பிற்பகுதி** | **மாணவரின் சட்டபூர்வப் பெயரின் முற்பகுதி** | **மாணவரின் சட்டப்பூர்வப் பெயரின் நடுப்பகுதி** | **மாணவரின் விருப்பப் பெயர்** |
|---|---|---|---|
| முகவரி | | | அபார்ட்மெண்ட் எண் |
| நகரம் | மாநிலம் | | அஞ்சல் குறியீடு |
| வீட்டு தொலைபேசி | மொபைல்/செல் ஃபோன் | | |
| பாலினம் ❑ ஆண் ❑ பெண் | பிறந்த தேதி (mm/dd/yyyy) | பிறந்த இடம் (நகரம், மாநிலம், மாவட்டம் அல்லது நாடு) | |

மாணவர் ஹிஸ்பானிக்கா லத்தீனோவா?
❑ ஆம் ❑ இல்லை

மாணவர்களின் இனத்தை எந்த வகை சிறப்பாக விவரிக்கிறது?
❑ அமெரிக்க இந்தியர் அல்லது அலாஸ்கன் பூர்வீகம்
❑ பூர்வீக ஹவாய் அல்லது பிற பசிபிக் தீவுவாசி
❑ ஆசியர்
❑ வெள்ளை
❑ கருப்பு அல்லது ஆப்பிரிக்க அமெரிக்கர்

மாணவர் யாருடன் வசிக்கிறார்? (பெயர் மற்றும் உறவு)

### குடும்பத் தகவல்

| **1 பெற்றோர் பெயரின் பிற்பகுதி** | **1 பெற்றோர் பெயரின் முற்பகுதி** | **1 பெற்றோர் பெயரின் நடுப்பகுதி** | **பற்றோர் திருமணத்திற்கு முந்தைய பெயர்** (பொருந்தினால்) | இறந்தவர் ❑ ஆம் ❑ இல்லை |
|---|---|---|---|---|
| முகவரி ❑ மேலே உள்ளதைப் போலவே | | | | அபார்ட்மெண்ட் எண் |
| நகரம் | மாநிலம் | | | அஞ்சல் குறியீடு |
| வேலை வழங்குபவர் | | மின்னஞ்சல் | | |
| வீட்டு தொலைபேசி | மொபைல்/செல் ஃபோன் | பிசினஸ் ஃபோன் | | |

| **2 பெற்றோர் பெயரின் பிற்பகுதி** | **2 பெற்றோர் பெயரின் முற்பகுதி** | **2 பெற்றோர் பெயரின் நடுப்பகுதி** | **பற்றோர் திருமணத்திற்கு முந்தைய பெயர்** (பொருந்தினால்) | இறந்தவர் ❑ ஆம் ❑ இல்லை |
|---|---|---|---|---|
| முகவரி ❑ மேலே உள்ளதைப் போலவே | | | | அபார்ட்மெண்ட் எண் |
| நகரம் | மாநிலம் | | | அஞ்சல் குறியீடு |
| வேலை வழங்குபவர் | | மின்னஞ்சல் | | |
| வீட்டு தொலைபேசி | மொபைல்/செல் ஃபோன் | பிசினஸ் ஃபோன் | | |

**மாற்றுப் பெற்றோர்** ❑ **சட்டப்பூர்வ பாதுகாவலர்** ❑ **ஸ்பான்சர் தகவல்** ❑ (பொருந்தினால் பார்க்கவும்)

| **பெயரின் பிற்பகுதி** | **பெயரின் முற்பகுதி** | **பெயரின் நடுப்பகுதி** | உறவு |
|---|---|---|---|
| முகவரி ❑ மேலே உள்ளதைப் போலவே | | | அபார்ட்மெண்ட் எண் |
| நகரம் | மாநிலம் | | அஞ்சல் குறியீடு |
| வேலை வழங்குபவர் | மின்னஞ்சல் | | |

# சார்லோட்-மெக்லென்பர்க் பள்ளிகள்

படிவம் 725110.1 **மாணவர் சேர்க்கை படிவம்** 7/2014

| வீட்டு தொலைபேசி | மொபைல்/செல் ஃபோன் | பிசினஸ் ஃபோன் |
|---|---|---|
| | | |

***CMS இல் சேர்ந்துள்ள குடும்பத்தின் மற்ற குழந்தைகள்***

| சட்டப்பூர்வ பெயர் | பள்ளி | வகுப்பு |
|---|---|---|
| சட்டப்பூர்வ பெயர் | பள்ளி | வகுப்பு |
| சட்டப்பூர்வ பெயர் | பள்ளி | வகுப்பு |

## சுகாதார தகவல்

உடல்நலம் அல்லது மருத்துவம் தொடர்பான பொருத்தமான தகவல்கள் மற்றும் வழிமுறைகளைக் குறிப்பிடவும்:

நோய்த்தடுப்பபூசிகளின் பதிவுகள் வழங்கப்பட்டுள்ளதா? ❑ஆம் ❑இல்லை

*வழங்கவில்லை எனில், வட கரோலினா சட்டத்திற்கு இணங்க, பள்ளி திறக்கும் நாளில் பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் தடுப்பூசிகளின் சான்றிதழை முதலில் சமர்ப்பிக்க வேண்டும். ஆவணங்கள் வழங்கப்படாவிட்டால், <u>பெற்றோர் மற்றும்/அல்லது பாதுகாவலர்களுக்கு 30 காலண்டர் நாட்கள் இருக்கும் ஆவணங்களை வழங்க அல்லது ஆதாரம் சமர்ப்பிக்கப்படும் வரை மாணவர் பள்ளியில் இருந்து விலக்கப்படுவார்.</u>*

எனது குழந்தைக்கு நோய்த்தடுப்பு மருந்துகளை வழங்கும்போது சுகாதார வழங்குநருக்குத் தேவைப்படும் எனது குழந்தைக்குப் போடப்பட்ட தடுப்பூசி போட்ட பதிவுகளைப் பகிர்ந்து கொள்ள பள்ளி/செவிலியருக்கு வழங்குவதற்கான அனுமதி உண்டு.

❑ ஆம் ❑ இல்லை

## பள்ளி தகவல்/கல்வி ரீதியான ஒதுக்கீடு

**மாணவரின் <u>தற்போதைய</u> கல்வி ஒதுக்கீடைக் குறிப்பிடவும்**

❑ ___________ பள்ளி ஆண்டின் புதிய மழலையர் பள்ளி ❑ ___________ பள்ளி ஆண்டில் _______ வகுப்பில் நுழையும் புதிய மாணவர்

❑ புதிய முன் மழலையர் பள்ளியில் சேர்ப்பதற்கான திட்டத்தைத் தேர்ந்தெடுக்கவும்: ❑ மாண்டிசாரி ❑ NC ப்ரீ-கே/பிரைட் பிகினிங்ஸ் ❑ EC

**மாணவரின் <u>முந்தைய</u> கல்வி ஒதுக்கிடத்தைக் குறிப்பிடவும்**

❑ நகராட்சி பள்ளி/சார்ட்டர் ஸ்கூல்: ❑ மெக்லென்பர்க் கவுண்டியில் ❑ மெக்லென்பர்க் கவுண்டிக்கு வெளியே

❑ தனியார் பள்ளி: ❑ மெக்லென்பர்க் கவுண்டியில் ❑ மெக்லென்பர்க் கவுண்டிக்கு வெளியே

❑ பொதுப் பள்ளி (நகராட்சி பள்ளி/சார்ட்டர் ஸ்கூல்: ): ❑ மெக்லென்பர்க் கவுண்டியில் ❑ மெக்லென்பர்க் கவுண்டிக்கு வெளியே

❑ குழுவாகத் தங்கும் உறைவிடம் அல்லது பிற நிறுவனம் ❑ பதிவுசெய்யப்பட்ட ஹோம் ஸ்கூலிங்/ வீட்டுக் கல்வி ❑ மற்றவை ____________________

❑ ப்ரீ ஸ்கூல் ❑ உரிமம் பெற்ற குழந்தை பராமரிப்பு ❑ ஹெட் ஸ்டார்ட் ❑ NC ப்ரீ-கே/பிரைட் பிகினிங்ஸ்

❑ எதுவுமில்லை - இது மாணவர்களின் முதல் கல்வி ஒதுக்கீடு

| **கடைசியாக படித்த பள்ளி** | | வகுப்பு |
|---|---|---|
| முகவரி | | |
| நகரம் | மாநிலம் | அஞ்சல் குறியீடு |
| கடைசியாக வருகை தந்த தேதி<br>மாதம் ஆண்டு | முந்தைய மாணவர் அடையாள எண் | |
| மாணவர் எப்போதாவது CMS இல் சேர்க்கப்பட்டவரா?<br>❑ ஆம் ❑ இல்லை | ஆம் எனில், கடைசியாக படித்த பள்ளி<br>பள்ளியின் பெயர் | பள்ளி ஆண்டு |

***உயர்நிலைப் பள்ளி மட்டும்***

மாணவர் மிடில்/ஜூனியர் ஹையில் எங்கு படித்தார்?

| பெயர் | முகவரி | நகரம் | மாநிலம் |
|---|---|---|---|

உங்கள் மாணவர் உயர்நிலைப் பள்ளியில் பட்டம் பெற்றவரா? ❑ ஆம் ❑ இல்லை

# சார்லோட்-மெக்லென்பர்க் பள்ளிகள்

படிவம் 725110.1

## மாணவர் சேர்க்கை படிவம்

7/2014

உங்கள் பிள்ளைக்கு தனிப்பட்ட கல்வித் திட்டம் (IEP) உள்ளதா? ❑ ஆம் ❑ இல்லை

உங்கள் பிள்ளைக்கு 504 கல்வித் திட்டம் உள்ளதா? ❑ ஆம் ❑ இல்லை

ஒவ்வொரு மாணவரும் தனது வீட்டில் பேசும் மொழியை (களை) கண்டறியுமாறு பள்ளிகளைக் கூட்டாட்சி மற்றும் மாநிலக் கொள்கைகள்கோருகின்றன. கீழே உள்ள ஏதேனும் கேள்விகளுக்கான பதில் ஆங்கிலம் அல்லாத வேறு மொழியாக இருந்தால், ஆங்கில மொழித் திறனைக் கண்டறிய உங்கள் பிள்ளை WIDA ACCESS ஒதுக்கிடத் தேர்வில் (W-APT) மதிப்பாய்வு செய்யப்படலாம் முடிவுகளின் அடிப்படையில், உங்கள் குழந்தை குறைந்த ஆங்கிலத் தேர்ச்சி பெற்றவராக (LEP) அடையாளம் காணப்படலாம் மற்றும் ஆங்கில மொழி கற்றல் (ELL) சேவைகளுக்குத் தகுதி பெறலாம்.

அமெரிக்காவில் K-12 பள்ளியில் உங்கள் குழந்தை முதன்முதலில் படித்த தேதி (Pre-K சேர்க்க வேண்டாம்)

உங்கள் மகன்/மகள் அடிக்கடி பேசும் மொழி எது?

உங்கள் மகன்/மகள் முதலில் பேச ஆரம்பித்தபோது கற்றுக்கொண்ட மொழி எது?

உங்கள் மகன்/மகளிடம் நீங்கள் அடிக்கடி பேசும் மொழி எது?

உங்கள் பிள்ளையின் கல்வி சம்பந்தப்பட்ட பள்ளிக் சந்திப்புகளுக்கு மொழிபெயர்ப்பாளர் தேவையா?
❑ ஆம் ❑ இல்லை ஆம் எனில், எந்த மொழியில்? ______________________________

## பாதுகாப்பு/கஸ்டடி

இந்தக் குழந்தையின் சட்டப்பூர்வ பாதுகாப்பு உங்களிடம் உள்ளதா? ❑ ஆம் ❑ இல்லை

குழந்தையை பள்ளியில் இருந்து அழைத்துச் செல்ல பெற்றோர் இருவருக்கும் அதிகாரம் உள்ளதா? ❑ ஆம் ❑ இல்லை இல்லையெனில், சட்டப்பூர்வ ஆவணங்களை வழங்கவும்

## அவசர தொடர்பு தகவல் *பெற்றோரைத் தவிர மற்ற தொடர்புகளுக்கான தகவலை வழங்கவும்*

அவசர தொடர்பு (பெற்றோர் தவிர) ______ பெயர் ______ உறவு ( ) ______ தொலைபேசி

இவரால் மாணவனை பள்ளியிலிருந்து அழைத்து வர முடியுமா? ❑ ஆம் ❑ இல்லை

அவசர தொடர்பு (பெற்றோர் தவிர) ______ பெயர் ______ உறவு ( ) ______ தொலைபேசி

இவரால் மாணவனை பள்ளியிலிருந்து அழைத்து வர முடியுமா? ❑ ஆம் ❑ இல்லை

அவசர தொடர்பு (பெற்றோர் தவிர) ______ பெயர் ______ உறவு ( ) ______ தொலைபேசி

இவரால் மாணவனை பள்ளியிலிருந்து அழைத்து வர முடியுமா? ❑ ஆம் ❑ இல்லை

## பெற்றோர்/சட்டப் பாதுகாவலர் கையொப்பம் தேவை

பெற்றோர்/சட்டப் பாதுகாவலர் ______________________________ தேதி ______________

***இந்தப் படிவத்தில் கையொப்பமிட்டு, உங்கள் குழந்தையின் வயதுச் சான்று மற்றும் சட்டப்பூர்வ பெயர், வசிப்பிடச் சான்றுகள் மற்றும் பாதுகாப்பான பள்ளிகள் ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும் சேர்க்கை அறிவிப்பு .***

### அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

மாணவர் அடையாளம் ______________ பதிவு தேதி ______________ வகுப்பு ______

பதிவு நிறைவு தேதி ______________ பள்ளி ______________

நோய்த்தடுப்பூசி போடப்பட்டதற்கான பதிவு ❑ ஆம் ❑ இல்லை போக்குவரத்து ______________

வயது/சட்டப்பூர்வ பெயருக்கான சான்று ❑ ஆம் ❑ இல்லை ஆசிரியரின் பெயர் ______________

வசிப்பிடச் சான்று ❑ ஆம் ❑ இல்லை முந்தைய பள்ளி பதிவுகள் ❑ ஆம் ❑ இல்லை

பாக்கெட் பெறும் பள்ளி ______________ பாக்கெட்டைப் பெறும் நபரின் பெயர் ______________

சசர்வதேச மைய 980-343-3784 த்திற்குப் பரிந்துரைக்கப்பட்டது ______________ தேதி ______________

# வடக்கு கரோலினாவின் பொதுப் பள்ளிகள்

**பொது அறிவுறுத்தல் துறை** | கேத்தரின் ட்ரூட், *பொதுக்கல்வி கண்காணிப்பாளர்*

WWW.DPI.NC.GOV

## தொழில்சார் ஆய்வு

**மாணவன் பெயர்:** ______________________________________________

**பெயரின் பிற்பகுதி** **பெயரின் முற்பகுதி**

**பள்ளி:** ______________________________ **வகுப்பு:** ______________

வட கரோலினா பொதுக் கல்வித் துறை மூலம் புலம்பெயர்ந்தோர் கல்வித் திட்டம், கடந்த மூன்று ஆண்டுகளில், இடம்பெயர்ந்து விவசாயம் அல்லது மீன்பிடித் தொழிலைச் செய்த குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு ஆதரவு மற்றும் அறிவுறுத்தல் சேவைகளை வழங்குகிறது. இந்தத் திட்டத்தில் உங்கள் பிள்ளைகள் அல்லது உறவினர்கள் சேவைகளைப் பெறத் தகுதியுடையவர்களா என்பதைத் தீர்மானிப்பதற்கான உங்கள் உதவி பாராட்டுதலுக்குரியது. பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளித்து, கணக்கெடுப்பை பள்ளிக்கு அனுப்பவும்.

1. **நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்தில் உள்ள யாரேனும் கடந்த மூன்று வருடங்களில் கீழே உள்ள ஏதேனும் ஒரு பகுதியில் பணிபுரிந்திருக்கிறீர்களா?**
   **இல்லை** ______ **ஆம்** ______ **(பொருந்தும் அனைத்தையும் தேர்ந்தெடுத்து கேள்வி எண் 2ஐத் தொடரவும்)**

2. **கடந்த மூன்று ஆண்டுகளில் நீங்கள் அல்லது உங்கள் குடும்பம் வேறொரு மாவட்டத்தில் அமைந்த பள்ளி அல்லது வேறு நகரம் அல்லது மாவட்டத்திற்குச் சென்றுவிட்டீர்களா?**
   **இல்லை** ______ **ஆம்** ______

| | | | |
|---|---|---|---|
| பழங்கள் மற்றும் காய்கறிகள், புகையிலை, சர்க்கரைவள்ளி கிழங்கு, நட்ஸ், பருத்தி அல்லது விவசாயப் பண்ணைகள், பண்ணைகள், வயல்வெளிகள் மற்றும் திராட்சைத் தோட்டங்களில் அறுவடை செய்பவர் ☐ | ஒரு பழம் அல்லது காய்கறி கேனரி அல்லது ஒரு பழம் அல்லது காய்கறி பேக்கிங் ஆலையில் வேலை செய்பவர் ☐ | பால் பண்ணையில் வேலை செய்தல் ☐ | மீன்பண்ணை, இறால் அல்லது கெளுத்தி மீன் பண்ணையில் வேலை செய்பவர் ☐ |

| | | | |
|---|---|---|---|
| இறைச்சிக் கூடத்தில் வேலை செய்பவர் (கோழி, மாடு அல்லது பன்றி) ☐ | கோழி அல்லது பன்றி பண்ணையில் வேலை செய்பவர் ☐ | ஒரு தாவர வளர்ப்பு அறை/நர்சரி அல்லது பழத்தோட்டத்தில் வேலை செய்பவர்; மரங்களை வளர்ப்பது அல்லது அறுவடை செய்வது ☐ | விவசாயத்தில் இது போன்ற பிற வேலைகள் எனில் அதை விளக்கவும்: ____________ ____________ ____________ |

3. **நீங்கள் இந்த பள்ளி மாவட்டத்திற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு வந்தீர்கள்? மாதம்** ______ **ஆண்டு** ______
4. **பெற்றோரின் பெயர்(கள்)**______________________________
5. **உங்கள் தற்போதைய முகவரி என்ன?**

   ______________________________________________

   **முகவரி**

   ______________________________________________

   **நகரம்** **மாநிலம்** **அஞ்சல் குறியீடு**

6. **தொலைபேசி எண்(கள்):** ______________________________

# சார்லோட்-மெக்லென்பர்க் பள்ளிகள்

## பாதுகாப்பான பள்ளிகள் சேர்க்கை அறிவிப்பு

*பாதுகாப்பான பள்ளிகள் சேர்க்கை அறிவிப்புவட கரோலினா பொதுச் சட்டம் 115C-366 (a4) இன் கீழ் சார்லோட்-மெக்லென்பர்க் பள்ளிகளுக்கு மாற்றப்படும் அனைத்து மாணவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலர்கள், இந்த அல்லது வேறு எந்த மாநிலத்தில் உள்ள பள்ளி அல்லது இந்த அல்லது வேறு எந்த மாநிலத்தில் ஒரு குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டு மாணவர் இடைநீக்கம் செய்யப்பட்டாரா அல்லது தனியார் அல்லது பொது பள்ளிகளில் கலந்துகொள்வதில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளாரா என்பது குறித்த அறிக்கையை வழங்க வேண்டும். இந்த மாநிலத்தில் அல்லது வேறு எந்த மாநிலத்தில் தனியார் அல்லது அரசுப் பள்ளியில் சேராத அல்லது படிக்காத மாணவருக்கு இது பொருந்தாது.*

### மாணவர் சேர்க்கை தகவல்

பெயர் ______________________________________________
பிற்பகுதி முற்பகுதி நடுப்பகுதி

முகவரி ______________________________________________
தெரு நகரம் மாநிலம் அஞ்சல் குறியீடு

பிறந்த தேதி ____________________ வயது ______________ வகுப்பு ______________

### இடைநீக்கங்கள் மற்றும் வெளியேற்றங்கள்

மேலே குறிப்பிப்பட்ட மாணவருக்கான பொருத்தமான பெட்டியைக் குறிக்கவும்.

❒ தற்போது எந்தப் பள்ளியிலிருந்தும் இடைநீக்கம் **செய்யப்படவில்லை** அல்லது வெளியேற்றப்படவில்லை மற்றும் நிலுவையில் உள்ள இடைநீக்கம் அல்லது நீக்கம் இல்லை

❒ நீண்ட கால (10 நாட்களுக்கு மேல்) இடைநீக்கம் அல்லது வெளியேற்றம் பரிந்துரைக்கப்படுகிறது

______________________________ (பள்ளியிலிருந்து). குற்றம் மற்றும் நிலுவையில் உள்ள ஒழுக்கத்தை விளக்கவும்.

______________________________________________

______________________________________________

நீண்ட காலமாக இடைநீக்கம் செய்யப்பட்டவர் அல்லது வெளியேற்றப்பட்டவர் ____________________ (பள்ளியிலிருந்து).

குற்றம் மற்றும் நிலுவையில் உள்ள ஒழுக்கத்தை விளக்கவும். ______________________________

______________________________________________

முந்தைய பள்ளியின் முகவரி: ______________________________

முந்தைய பள்ளி தொலைபேசி: ______________________________

### குற்றவியல் தண்டனைகள்

மேலே குறிப்பிப்பட்ட மாணவருக்கான பொருத்தமான பெட்டியைக் குறிக்கவும்.

❒ இந்த அல்லது பிற மாநிலத்தில் ஒரு குற்றத்திற்காக **தண்டிக்கப்படவில்லை**

❒ குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டது: ______________________________

(நகரம், நகரம் மற்றும் மாநிலம்): ______________________________

தண்டனை தேதி: ______________________________

குற்றத்தின் விளக்கம்: ______________________________

______________________________________________

______________________________________________

நன்னடத்தை அதிகாரி: ______________________ தொலைபேசி: ______________

நீதிமன்ற ஆலோசகர்: ______________________ தொலைபேசி: ______________

**நான், ____________________ (பெற்றோர்/பாதுகாவலர்/ சட்டப் பாதுகாவலர்) மேற்கூறிய தகவல்கள் உண்மை மற்றும் துல்லியமானவை என்று இதன் மூலம் சத்தியம் செய்கிறேன் அல்லது உறுதிப்படுத்துகிறேன்.**

பெற்றோர்/பாதுகாவலர்/ சட்டப் பாதுகாவலரின் பெயர்: ______________________________

வீடு/செல்/பணியிடத் தொலைபேசி: ______________________________

**cms**
Charlotte-Mecklenburg Schools

# மாணவர் தொழில்நுட்ப ஒப்பந்தம்

மாணவர்களுக்கு CMS கணினிகளில் இருந்து இணைய அணுகலை வழங்குவதற்கு முன் அல்லது CMS நெட்வொர்க்கைப் பயன்படுத்த அனுமதிக்கும் முன், அவர்கள் "மாணவர் இணைய பயன்பாட்டு ஒப்பந்தத்தின்" விதிமுறைகளை ஏற்க வேண்டும். இந்த ஒப்பந்தம் கல்வி நோக்கங்கள் மற்றும் பயன்பாட்டிற்கான வழிகாட்டுதல்களை வரையறுக்கிறது, மாணவர் பயனர்களின் ஆன்லைன் செயல்பாடுகள் கண்காணிப்புக்கு உட்பட்டவை என்பதைத் தெரிவிக்கிறது, மேலும் ஏற்றுக்கொள்ள முடியாத பயன்பாடுகளாக இருந்தால் அணுகலைத் திரும்பப் பெறுவதற்கும் சாத்தியமான சட்ட நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் வகையிலும் அமைகிறது. தங்கள் குழந்தைகள் CMS நெட்வொர்க்கைப் பயன்படுத்துவதையும்/அல்லது பள்ளியில் இணையத்தை அணுகுவதையும் விரும்பாத 18 வயதுக்கு குறைவான மாணவர்களின் பெற்றோர்கள் பள்ளிக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். (S-SINT)

| **CMS மாணவர் இணையப் பயன்பாட்டு ஒப்பந்தம்** |
|---|
| *CMS நெட்வொர்க்குடன் இணைக்கப்பட்டுள்ள CMS கணினியில் உள்நுழைவதற்கு முன் மாணவர்கள் இந்த ஒப்பந்தத்தை ஏற்க வேண்டும்.* |
| எனது பள்ளியில் கணினிகள் மற்றும் இணையம் உள்ளது என்பதை நான் புரிந்துகொள்கிறேன், அதனால் எனது வகுப்பறையில் நான் என்ன படிக்கிறேன் என்பதைப் பற்றி மேலும் அறிய முடியும். எனது பள்ளியில் படிக்கும் மாணவர்களும் ஊடக மையத்திலிருந்து புத்தகங்களைப் பார்க்கக் கணினியைப் பயன்படுத்துகின்றனர்.<br><br>நான் பள்ளியில் இணையத்தைப் பயன்படுத்த விரும்பினால் நான் பின்பற்ற வேண்டிய விதிகள் மாணவர் கையேட்டில் உள்ளன. எனது ஆசிரியர் இந்த விதிகளை எனக்கு விளக்கினார், நான் அவற்றைப் புரிந்துகொண்டேன். இணையத்தைப் பயன்படுத்தும் போது எனது ஆசிரியரின் விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றவில்லை என்றால், பள்ளியில் இணையத்தைப் பயன்படுத்த நான் அனுமதிக்கப்படாமல் போகலாம். இந்த விதிகளைப் பின்பற்றவில்லை என்றால், மாணவர் நடத்தை விதிகளில் உள்ள விதிகளை நான் மீறிவிட்டேன் என்றும் பொருள். எனது ஆசிரியரின் விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றாததற்காக என் மீது ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்படலாம் அல்லது நான் பள்ளியில் இருந்து இடைநீக்கப்படலாம். |

| **மாணவர்கள் CMS நெட்வொர்க் அல்லது இணையத்தைப் பயன்படுத்துவதற்கான விதிகள்** |
|---|
| **இணையம் அல்லது CMS நெட்வொர்க்கைப் பயன்படுத்துவதற்கான விதிகளை மீறுவது ஒரு முக்கியமான விஷயம். "Netiquette Rules" ஐப் பின்பற்றாத அல்லது "ஏற்றுக்கொள்ள முடியாத பயன்பாடுகள்" என்று கூறக்கூடிய செயல்களையும் செய்யக்கூடிய மாணவர்கள் CMS மாணவர் நடத்தை விதிகளை மீறுகின்றனர், மேலும் அமெரிக்கா அல்லது வட கரோலினாவின் சட்டங்களையும் மீறுகின்றனர்.** |
| *S-SINT/R "மாணவர்களின் இணையப் பயன்பாடு மற்றும் நெட்வொர்க் அணுகல்" மற்றும் கொள்கை S-SINT, "மாணவர் இணையப் பயன்பாடு" ஆகியவற்றிலிருந்து பின்வரும் பட்டியல் சுருக்கப்பட்டுள்ளது, இதில் இந்த விதிகளின் விரிவான அறிக்கை உள்ளது. இந்த ஒழுங்குமுறை பெற்றோர்-மாணவர் கையேட்டில் மறுபதிப்பு செய்யப்பட்டு ஆன்லைனில் www.cms.k12.nc.us இல் கிடைக்கிறது.* |
| **ஏற்றுக்கொள்ள முடியாத பயன்பாடுகள்:**<br>• CMS நெட்வொர்க்கின் செயல்பாட்டை முடக்குவது<br>• நெட்வொர்க்கில் வைரஸ்களை அறிமுகப்படுத்துதல் (அல்லது அறிமுகப்படுத்த முயற்சித்தல்).<br>• ஹேக்கிங்<br>• சட்டவிரோதமான விஷயங்களைச் செய்யும்படி மற்றவர்களைக் கேட்பது<br>• அச்சுறுத்தும் அல்லது ஆபாசமான விஷயங்களைப் பார்ப்பது<br>• அவதூறு, பிறரை புண்படுத்தும் அல்லது அச்சுறுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்துதல்<br>• செக்ஸ் பற்றிய செய்திகள் அல்லது படங்களை அனுப்புதல்<br>• மற்றவர்களின் வேலைகளை நகலெடுத்தல்/திருடுதல்<br>• பொருட்களை விற்பது<br>• அரசியல் வேட்பாளர்களுக்காக வேலை செய்தல்<br>• தொடர்ந்து கடிதங்களை அனுப்புதல் அல்லது பணம் கேட்டல் (ஃபிஷிங்)<br>• அனுமதியின்றி மாணவர் அல்லது பள்ளி சம்பந்தப்பட்ட வேலைகளின் படங்களை இடுகையிடுதல்<br>• பிற மாணவர்கள் அல்லது ஊழியர்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை அவர்களின் அனுமதியின்றி வழங்குதல்<br>• ஆசிரியரின் அனுமதியின்றி மின்னஞ்சலை அனுப்புதல்<br>• அனுமதியின்றி நிறுவனத்திற்கு சொந்தமானத் தகவல்களை வழங்குதல் |

| **ஏற்றுக்கொள்ள முடியாத பயன்பாடுகளுக்கான விளைவுகள்**<br>(நடத்தை விதி) | | | |
|---|---|---|---|
| நிலை 1: கலந்தாய்வு | நிலை 2: இடைத்தடை | நிலை 3: 1-5 நாட்களுக்கு இடைநீக்கம் | நிலை 4: 6-10 நாட்களுக்கு இடைநீக்கம் |



**படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் மாணவரின் பள்ளிக்கு திரும்ப அனுப்பவும்.**

Charlotte-Mecklenburg Schools

# மாணவர் தொழில்நுட்ப ஒப்பந்தம்
## தொடர்கிறது

### பெற்றோர்/பாதுகாவலர் மற்றும் மாணவர் அறிவிப்பு

மாணவர் பெயரின் பிற்பகுதி ______ மாணவர் பெயரின் முற் பகுதி ______ வகுப்பு ______ மாணவர் அடையாளம் ______

பெற்றோர்/பாதுகாவலர் பெயரின் பிற்பகுதி ______ பெற்றோர்/பாதுகாவலர் பெயரின் முற் பகுதி ______ தேதி ______

எனக்கு சார்லோட்-மெக்லென்பர்க் பள்ளிகள் (CMS) சாதனம் மற்றும் சார்ஜர் ஆகியவற்றை வழங்கியுள்ளது. இந்தப் பொருட்களைப் பாதுகாப்பாகவும் நன்கு பராமரிப்புடனும் வைத்துக்கொள்வேன் என நான் உறுதி அளிக்கிறேன். கீழே விளக்கப்பட்டுள்ளபடி சாதனத்தைப் பராமரிப்பதற்கான வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவேன்.

**சாதனக் கட்டணம்**

*மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள்/ பாதுகாவலர்கள் தங்கள் கைவசம் இருக்கும்போது சேதமடைந்த, தொலைந்த அல்லது திருடப்பட்ட சாதனங்களைச் சரிசெய்வதற்கான செலவுக்கு பொறுப்பாவார்கள்.*

| கட்டண அட்டவணை | எடுத்துக்காட்டுகள் அடங்கும் |
|---|---|
| சார்ஜர்களுக்கு $10 | **இழந்த அல்லது சேதமடைந்த:** Chromebook சார்ஜர்கள், iPad சார்ஜர்கள் |
| சேதமடைந்த சாதனங்களுக்கு $15 | விசைப்பலகை சேதம், திரை சேதம், ஹெட்ஃபோன் ஜேக்/சார்ஜிங் போர்ட் சேதம், விரிசல் உறை |
| $50 தொலைந்தது திருடப்பட்டது அல்லது மொத்த மாற்றீடு | **இழந்த, திருடப்பட்ட அல்லது பழுதுபார்க்க முடியாத அளவுக்கு சேதமடைந்தது:** Chromebooks, iPadகள், ஹாட்ஸ்பாட்கள் |
| $5 இதர | காணமல் போன கீபோர்டு, கீஸ், அசெட் டேகுகள், ஸ்டிக்கர்கள் அல்லது எழுதப்பட்ட அடையாளங்கள் |

### விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்

**பாதுகாப்பு**

- எனக்கு ஒதுக்கப்பட்ட சாதனம் எங்கிருக்கும் என்பதை எப்போதும் கண்காணிக்க ஒப்புக்கொள்கிறேன்.
- எனக்கு ஒதுக்கப்பட்ட சாதனத்தை நான் ஒருபோதும் கவனிக்காமல் விடமாட்டேன். பயன்பாட்டில் இல்லாதபோது அது சரியாகப் பாதுகாக்கப்படும்.
- எந்த சூழ்நிலையிலும் எனக்கு ஒதுக்கப்பட்ட சாதனத்தை யாருக்கும் கடனாக வழங்க எனக்கு அனுமதி இல்லை என்பதை புரிந்துகொள்கிறேன்.
- ஒதுக்கப்பட்ட சாதனம் கண்காணிப்பு நோக்கங்களுக்காக பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது என்பதையும் எனது பயன்பாடு கண்காணிக்கப்படும் என்பதையும் ஒப்புக்கொள்கிறேன்.
- தேவையற்ற கவனத்தை ஈர்க்கும் செயல்களைத் தவிர்த்து, சாதனத்தைப் பயன்படுத்தும் போது எனது தனிப்பட்ட பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிப்பேன்.

**பராமரிப்பு**

- எனக்கு ஒதுக்கப்பட்ட சாதனத்தின் திரையில் கீறல்கள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுப்பேன்.
- ஏதேனும் சேதம் ஏற்படாமல் இருக்க எனக்கு ஒதுக்கப்பட்ட சாதனத்திலிருந்து உணவு மற்றும் பானங்கள் ஒதுக்கி வைக்கப்படுவதை உறுதி செய்வேன்.
- சாதனம் அல்லது அதன் பெட்டியில் அங்கீகரிக்கப்படாததைக் குறிக்கும், வரைதல், எழுதுதல் அல்லது ஸ்டிக்கர்கள் வைப்பதைத் தவிர்ப்பேன்.
- எனக்கு ஒதுக்கப்பட்ட சாதனத்தின் எந்தப் பகுதியையும் பிரிப்பதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு எந்த முயற்சியும் அனுமதிக்கப்படாது என்பதை நான் புரிந்துகொள்கிறேன், மேலும் இதுபோன்ற செயல்களைச் செய்ய மாட்டேன் என்று நான் ஒப்புக்கொள்கிறேன்.
- கீறல்கள், விரிசல்கள் அல்லது பள்ளங்கள் உட்பட சேதம் ஏற்பட்டால், 24 மணி நேரத்திற்குள் பள்ளி நிர்வாகத்திற்கு சேதம் குறித்து உடனடியாகப் புகாரளிப்பேன்.
- எனக்கு ஒதுக்கப்பட்ட சாதனம் திருடப்பட்டாலோ சேதப்படுத்தப்பட்டாலோ, நான் காவல்துறையில் புகார் அளித்து 24 மணி நேரத்திற்குள் பள்ளி நிர்வாகத்திற்கு உடனடியாக தகவல் அறிவிப்பேன்.

**பயன்பாடு**

- CMS சாதனங்கள் மற்றும் நெட்வொர்க் அமைப்புகளைப் பயன்படுத்துவதற்கு CMS ஏற்றுக்கொள்ளக்கூடிய பயன்பாட்டுக் கொள்கையை (AUP) நான் பின்பற்றுவேன்.
- நான் சாதனத்தை மறுவடிவமைக்கவோ, பாதுகாப்பு அமைப்புகளை சேதப்படுத்தவோ அதன் ஆப்ரேட்டிங் சிஸ்டமை மாற்றவோ மாட்டேன்.
- சட்டப்பூர்வமாகப் பெறப்படாத மீடியா மற்றும் மென்பொருளைப் பதிவிறக்குவதைத் தடைசெய்யும் பொருந்தக்கூடிய பதிப்புரிமை மற்றும் மென்பொருள் உரிம ஒப்பந்தங்கள் அனைத்தையும் நான் கடைப்பிடிப்பேன்.
- எனக்கு ஒதுக்கப்பட்ட சாதனம் அல்லது வேறு எந்த எலக்ட்ரானிக் சாதனத்தையும் (S-DISC/R) பயன்படுத்தி மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் நான் எந்தவிதமான துன்புறுத்தல் அல்லது மிரட்டல் செயல்களில் (சைபர் மிரட்டல்) ஈடுபடமாட்டேன்.

**பொறுப்பு**

- எனக்கு ஒதுக்கப்பட்ட சாதனம், எந்த நேரத்திலும், எந்த அறிவிப்பும் இன்றி, பள்ளியில் உள்ள பணியாளர், ஆசிரியர் அல்லது நிர்வாகியின் ஆய்வுக்கு உட்பட்டது என்பதை நான் புரிந்துகொள்கிறேன். சாதனம் CMS இன் சொத்தாகவே உள்ளது என்பதை நான் மேலும் புரிந்துகொள்கிறேன்.
- CMS இன் கோரிக்கையின் பேரில், சாதனத்தையும் சார்ஜரையும் நல்ல வேலை நிலையில் உடனடியாகத் திருப்பித் தர ஒப்புக்கொள்கிறேன்.
- எனது பள்ளியிலிருந்து ஏதேனும் காரணத்திற்காக நான் வெளியேறினாலோ, வெளியேற்றப்பட்டாலோ அல்லது என் பள்ளியில் எனதுசேர்க்கையை நிறுத்தினாலோ, ஒதுக்கப்பட்ட சாதனத்தை கோரிக்கையின் பேரில் எனது பள்ளிக்குத் திருப்பித் தருவேன்.
- நான் டிஜிட்டல் குடியுரிமை பாடங்களை முடிப்பேன்.



**படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் மாணவரின் பள்ளிக்கு திரும்ப அனுப்பவும்.**

# மாணவர் தொழில்நுட்ப ஒப்பந்தம்
## தொடர்கிறது

*மாணவர்களுக்கு ஒதுக்கியுள்ள கடனாக வழங்கப்பட்ட சாதனங்களுக்கான பொறுப்பு*

சார்லட்-மெக்லென்பர்க் பள்ளிகள் (CMS) உங்கள் குழந்தைக்குக் கடன் வழங்கும் சாதனம் மற்றும் சார்ஜர் தொடர்பான உங்கள் சட்டப் பொறுப்புகளை இந்த அறிவிப்பு கோடிட்டுக் காட்டுகிறது.

எந்தவொரு CMS சொத்தையும் வேண்டுமென்றே சிதைக்கும், சேதப்படுத்தும் அல்லது திருப்பித் தரத் தவறிய எந்தவொரு மைனருக்கும் CMS ஒரு பெற்றோர் அல்லது பாதுகாவலரைப் பொறுப்பாக்கலாம்.S-DISC/R.

- முந்தைய பக்கத்தில் உள்ள *விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில்* பட்டியலிடப்பட்டுள்ள *பாதுகாப்பு, பராமரிப்பு, பயன்பாடு மற்றும் பொறுப்பு* நிபந்தனைகளை நான் ஒப்புக்கொள்கிறேன். எனது குழந்தை இந்த *விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குக்* கீழ்ப்படியத் தவறினால், அவருக்கு ஒதுக்கப்பட்ட சாதனத்திற்கு சேதமோ இழப்போ ஏற்பட்டால், சேதம் அல்லது இழப்புடன் தொடர்புடைய கட்டணத்தைச் செலுத்துவதற்கு நான் பொறுப்பு என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.
- மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சாதனம் சார்லோட்-மெக்லென்பர்க் பள்ளிகளின் சொத்து ஆகும், அது ஒதுக்கப்பட்ட மாணவருக்கு மட்டுமே பயன்படுத்தும் உரிமையை அளிக்கிறது.
- கணினி உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கான சார்லட்-மெக்லென்பர்க் பள்ளிகளின் ஏற்றுக்கொள்ளக்கூடிய பயன்பாட்டுக் கொள்கை மற்றும் சார்லட்-மெக்லென்பர்க் பள்ளிகளின் மாணவர் இணையப் பயன்பாட்டு ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு இணங்குவதாக நான் மேலும் ஒப்புக்கொள்கிறேன்.

மாணவர் பெயரை அச்சிடுக (கடைசி, முதல்): ____________________

மாணவர் கையொப்பம்: ____________________ தேதி: ____________________

பெற்றோர் (பாதுகாவலர்) பெயரை அச்சிடுக: ____________________

பெற்றோர் (பாதுகாவலர்) கையொப்பம்: ____________________ தேதி: ____________________

படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் மாணவரின் பள்ளிக்கு திரும்ப அனுப்பவும்.